1378

OL/2025(2026)/87/T-I,II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**87 T I, II**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)**
**General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)**

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය **I, II**
**தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் I, II**
Communication and Media Studies **I, II**

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் I

**அறிவுறுத்தல்கள் :**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
* **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** வரலாற்றுக்கு முந்தைய காலப்பகுதியில் தொடர்பாடல் முறையொன்றாக இருந்தது
(1) குகை ஓவியங்கள் ஆகும். (2) பேச்சுமொழி ஆகும்.
(3) சித்திர எழுத்து ஆகும். (4) எழுத்து ஆகும்.

**2.** எந்தத் தொடர்பாடல் வகையில் கலங்கரை விளக்க உத்தி பயன்படுத்தப்படுகின்றது?
(1) வெகுசனத் தொடர்பாடல் (2) ஆளிடைத் தொடர்பாடல்
(3) ஆளுள் தொடர்பாடல் (4) குழுத் தொடர்பாடல்

**3.** இலங்கையில் வானொலிச் சேவையை ஆரம்பித்ததில் முன்னோடி எனக் கருதப்படுபவர் யார்?
(1) ஜோன் என். லாம்சன் (2) சேர். ஹியூ கிளிபட்
(3) எட்வேர்ட் ஹாபர் (4) வில்லியம் ஹென்றி மானிங்

**4.** குறித்ததொரு தகவல் பகுதியொன்றை, குறிப்பிட்ட நபரொருவருக்கு நேரடியாகத் தொடர்பாடல் செய்ய முடியுமான மிகப் பொருத்தமான அச்சு ஊடகம் எது?
(1) செய்திப்பத்திரிகை (2) சஞ்சிகை
(3) சுவரொட்டி (4) துண்டுப் பிரசுரம்

**5.** வேறுபட்ட செய்திகளை ஐந்து புலன்களூடாகவும் பெற்று அவற்றைப் புரிந்துகொள்வதானது
(1) சமூகமயமாதல் ஆகும். (2) புலக்காட்சி ஆகும்.
(3) மொழிரீதியான குறுக்கீடு ஆகும். (4) சுவைத்தல் ஆகும்.

**6.** ஊடகச் செய்தியொன்றை வரிகளுக்கிடையேயாக வாசிப்பதற்குப் பெறுநருக்கு உதவி வழங்கப்படுவது
(1) விமர்சகரால் ஆகும். (2) ஆசிரியரால் ஆகும்.
(3) வாயிற்காப்பாளரால் ஆகும். (4) உரையாசிரியரால் ஆகும்.

**7.** செய்திப்பத்திரிகை ஊடகத்தில் நகைச்சுவையும் அங்கதச்சுவையும் இணைந்ததாகத் தகவல் அறிக்கையிடப்படுவதற்கு மிகப்பொருத்தமான வழி எது?
(1) செய்தி (2) ஆசிரியர் தலையங்கம்
(3) கேலிச்சித்திரம் (4) சிறப்புக் கட்டுரை

[பக். 2 ஐப் பார்க்க

**8.** சமூக வானொலிச் சேவை எது?
(1) மஹநுவர (2) ருஹுணு
(3) ரஜரட்ட (4) மகாவலி

**9.** அலுவலகமொன்றில் நாளாந்தக் கடமைகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு குறைந்தளவு பங்களிப்பொன்று வழங்கப்பெறுவது
(1) கணிப்பானால் ஆகும்.
(2) அலுவலகப் பதவி முத்திரைக் கருவியினால் ஆகும்.
(3) காசுப்பதிவு இயந்திரத்தினால் ஆகும்.
(4) தபால் முத்திரையிடல் இயந்திரத்தினால் ஆகும்.

**10.** இலங்கையில் ஆரம்பகால இலத்திரனியல் ஊடகங்கள் முன்னெடுக்கப்பட்டதற்கான அடிப்படை
(1) போட்டித்தன்மை ஆகும். (2) வணிக நோக்கங்கள் ஆகும்.
(3) தேர்ந்தெடுக்கப்பட்ட பெறுநர்கள் ஆகும். (4) பொழுதுபோக்கும் கல்வியும் ஆகும்.

**11.** செய்திப் பெறுமதிக்குப் **பொருத்தமற்றது** எது?
(1) காலத்தோடு இயைந்திருத்தல் (2) அண்மித்த தன்மை
(3) சாதாரண தன்மை (4) தொடர்புபடுதல்

**12.** கீழ் தரப்படும் உபகரணங்களுள் இலத்திரனியற் கருவியாகக் கருதப்படுவது எது?
(1) பக்கம் புரட்டி (2) செய்திப் பலகை
(3) ஊடாடுகைப் பலகை (4) காந்தப் பலகை

**13.** நாங்கள் பயன்படுத்தும் ஊடகங்களுள், கற்பனையை ஊக்குவிப்பதற்கு அதிக உதவி வழங்குபவை
(1) செய்திப்பத்திரிகை, வானொலி ஆகும். (2) வானொலி, சினிமா ஆகும்.
(3) சினிமா, தொலைக்காட்சி ஆகும். (4) தொலைக்காட்சி, வானொலி ஆகும்.

**14.** ஊர்வலத்தின்போது, சுழற்றப்படும் தீப்பந்தமொன்றின் வேகம் அதிகரிக்கும்போது அது ஓர் தீ வளையமாகத் தோற்றமளிக்கும். இதற்குக் காரணமான விஞ்ஞான எண்ணக்கரு
(1) பார்வையின் தொடரறாத்தன்மை ஆகும். (2) புலக்காட்சி ஆகும்.
(3) ஊடக இரைச்சல் ஆகும். (4) கற்பனை ஆகும்.

**15.** இணையத்திலுள்ள பிரபலமானதொரு தேடுபொறி
(1) வட்ஸ்அப் (WhatsApp)ஆகும். (2) கூகிள் (Google) ஆகும்.
(3) லிங்டென் (LinkedIn) ஆகும். (4) முகநூல் (Facebook) ஆகும்.

**16.** பின்வரும் பண்புகளைக் கருத்திற்கொள்க.
✳ மொழி முறை சார்ந்தது
✳ குறிப்பிட்ட சந்தர்ப்பங்களுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட மாதிரிகள் உள்ளன
✳ ஏற்றுக்கொள்ளப்பட்ட இலக்கண முறைகள் பயன்படுத்தப்படும்
மேற்படி பண்புகளை உள்ளடக்கிய தொடர்பாடல் வடிவம் எது?
(1) எழுத்துத் தொடர்பாடல் (2) வாய்மொழித் தொடர்பாடல்
(3) செவிப்புலத் தொடர்பாடல் (4) கட்புலத் தொடர்பாடல்

**17.** தனியார் செய்திப்பத்திரிகை நிறுவனமொன்றின் உரிமையாளர் **அல்லாதவர்** யார்?
(1) டி. ஆர். விஜேவர்த்தன (2) அனில் விஜேவர்த்தன
(3) உபாலி விஜேவர்த்தன (4) ரஞ்சித் விஜேவர்த்தன

**18.** செய்தி பற்றிய மிகச்சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) தலைகீழ் பிரமிட் மாதிரியை அது பயன்படுத்துகிறது.
(2) அது ஓர் படைப்பாக்கத் தொகுப்பு ஆகும்.
(3) ஆரம்பத்தில் அறிமுகமொன்றை அது உள்ளடக்கியிருக்கும்.
(4) முடிவுரையொன்றுடன் அது முற்றுப்பெறும்.

[பக். 3 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**19.** யுனெஸ்கோவின் தொடர்பாடல் நிபுணர் போல் டீ மெசுனியர் அறிமுகப்படுத்தியது
(1) பார்வையின் தொடரறாத் தன்மை பற்றிய கோட்பாடு ஆகும்.
(2) செய்தியொன்றின் நம்பகத்தன்மை பற்றிய சமன்பாடு ஆகும்.
(3) தொடர்பாடல் பற்றிய கணித சூத்திரம் ஆகும்.
(4) ஆட்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்ட தொடர்பாடல் வகைப்படுத்தல் ஆகும்.

**20.** இப் படத்தில் காட்டப்படும் உலகப் புகழ்பெற்ற சினிமா ஆளுமை



(1) தோமஸ் அல்வா எடிசன் ஆவார்.
(2) குக்லியெல்மோ மார்க்கோணி ஆவார்.
(3) ஜோன் லொஜி பெயார்ட் ஆவார்.
(4) சார்ளி சாப்ளின் ஆவார்.

**21.** தொலைக்காட்சி நேரலை நிகழ்ச்சியொன்றுக்குப் பதிலளிப்பதற்கான மிகப் பொருத்தமானதும் விரைவானதுமான வழிமுறை
(1) தொலைபேசி அழைப்பு ஆகும். (2) மின்னஞ்சல் ஆகும்.
(3) தபாலட்டை ஆகும். (4) கடிதம் ஆகும்.

**22.** இலங்கையில் தற்போது அச்சிடுவதை நிறுத்தியுள்ள செய்திப்பத்திரிகை வகைமை எது?
(1) சிறார்களுக்கான செய்திப்பத்திரிகைகள் (2) கல்விசார் செய்திப்பத்திரிகைகள்
(3) சித்திரக்கதைச் செய்திப்பத்திரிகைள் (4) பெண்களுக்கான செய்திப்பத்திரிகைகள்


**23.** ஜோன் லொக், ஜோன் மில்டன், ஜோர்ச் ஸ்டுவர்ட் மில், தோமஸ் ஜெபர்சன் ஆகியோர் பின்வரும் வகைப்பாடுகளில் எதனைச் சார்ந்தவர்களாக உள்ளனர்?
(1) ஊடகவியலாளர்கள் (2) இலக்கியக் கலைஞர்கள்
(3) சினிமா ஆளுமைகள் (4) சமூகவாதிகள்

**24.** சமூக ஊடகங்கள் பற்றிய மாணவர்களின் சில கருத்துக்கள் கீழே தரப்படுகின்றன.

சசிகலா : சமூக ஊடகங்கள் வழியாகத் தகவல்கள் வேகமாகப் பரவுகின்றன.
ரிஷி : நல்ல தகவல்கள் காணப்படுகின்றன. ஆனால், போலியான தகவல்களும் அதிகமாகக் காணப்படுகின்றன.
நதியா : ஆம், அது பொறுப்புணர்வுடன் பயன்படுத்தப்படாவிட்டால், அது உங்களையும் சமூகத்தையும் பாதிக்கும்.

சமூக ஊடகங்கள் பற்றிய சரியான கருத்துக்கள் தரப்பட்டது
(1) சசிகலா, நதியாவினால் மாத்திரம் ஆகும்.
(2) ரிஷி, சசிகலாவினால் மாத்திரம் ஆகும்.
(3) நதியா, ரிஷியினால் மாத்திரம் ஆகும்.
(4) சசிகலா, ரிஷி, நதியா மூவரினாலும் ஆகும்.

**25.** பின்வரும் விளக்கப்படத்தைக் கருத்திற்கொள்க.



மேலுள்ள விளக்கப்படம் சித்திரிப்பது,
(1) தனிச் சங்கிலி மாதிரியை ஆகும். (2) நிகழ்தகவுச் சங்கிலி மாதிரியை ஆகும்.
(3) கொத்தணிச் சங்கிலி மாதிரியை ஆகும். (4) புறணிபேசுதல் சங்கிலி மாதிரியை ஆகும்.

**26.** ஊடகங்களால் பெறுநர் தூண்டப்படுவதற்கான உத்திகளைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் நேரடியாகத் தொடர்புபடுவது
(1) விளம்பரத்துடன் ஆகும்.
(2) ஊடக விமர்சனத்துடன் ஆகும்.
(3) அனுபவக் களத்துடன் ஆகும்.
(4) விமர்சனத்திறனுள்ள பெறுநர்தன்மையுடன் ஆகும்.

[பக். 4 ஐப் பார்க்க

**27.** திரைப்படப் படப்பிடிப்புத்தள அரங்குகளைப் பதிவுசெய்யும் புகைப்படங்கள் பிரதானமாகப் பயன்படுத்தப்படுவது
(1) நடிக நடிகையர் தொடர்பான நினைவுப் பொருட்களாக வைத்திருப்பதற்கு ஆகும்.
(2) திரைப்படமெடுத்தலின் தொடர்ச்சித்தன்மையைப் பேணுவதற்கு ஆகும்.
(3) திரைப்படத்தின் சுவரொட்டியை உருவாக்குவதற்கு ஆகும்.
(4) விசேட நிகழ்வுகளுக்காக ஊடகங்களுக்கு வெளியிடுவதற்கு ஆகும்.

**28.** தற்காலத்தில் இலத்திரனியல் ஊடக நிகழ்ச்சிகளில் ஆண் தொகுப்பாளர்களுடன் இணைந்து பெண் தொகுப்பாளர்களும் அதிகம் காணப்படுகின்றனர். இந்தச் சூழமைவுடன் நெருங்கியதான எண்ணக்கரு
(1) ஜனநாயகம் ஆகும். (2) மனிதநேயம் ஆகும்.
(3) பால்நிலை ஆகும். (4) குடியுரிமை ஆகும்.

**29.** இணையவழியில் செவிமடுக்கக்கூடியதான வானொலிச் சேவைகள் பற்றிய சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) சிக்கலான செயன்முறையைக் கொண்டதாகும்.
(2) ஒப்பீட்டளவில் செலவு குறைந்த முறைமையொன்று ஆகும்.
(3) சிற்றலைகள் மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றன.
(4) மின்காந்த அலைகள் வினைத்திறனாகப் பயன்படுத்தப்படுகின்றன.

**30.** "துல்லியமான தருணத்திற்கு முன்னரோ அல்லது பின்னரோ எடுத்துக்கொள்ளப்படும் புகைப்படங்கள் வெற்றிகரமானவை அல்ல." இந்தக் கூற்று அதிகம் தொடர்புபடும் சந்தர்ப்பம்
(1) பிறந்தநாளொன்றுக்கு கேக் வெட்டப்படும்போது புகைப்படமொன்று எடுக்கப்படுவதுடன் ஆகும்.
(2) செய்திப்பத்திரிகை சிறப்புக் கட்டுரையொன்றுக்காகப் புகைப்படமொன்று எடுக்கப்படுவதுடன் ஆகும்.
(3) ஓட்ட நிகழ்வொன்றின் இறுதிக் கணத்தில் புகைப்படமொன்று எடுக்கப்படுவதுடன் ஆகும்.
(4) கல்விச் சுற்றுலா ஒன்றின்போது குழுப்புகைப்படமொன்று எடுக்கப்படுவதுடன் ஆகும்.

**31.** செய்திப்பத்திரிகையொன்றில் புகைப்படமொன்று ஒழுக்கநெறிசார்ந்து அவதானத்துடன் பிரசுரிக்கப்படுவதற்கான சந்தர்ப்பம் எது?
(1) செயற்கை நுண்ணறிவுத் (AI) தொழில்நுட்பத்துடன் புகைப் படங்கள் உருவாக்கப்பட்டு, செய்திப்பத்திரிகைக்கு அவை வழங்கப்படுதல்.
(2) இணையத்திலிருந்து புகைப்படங்கள் பெறப்பட்டு செய்திப்பத்திரிகைக்கு வழங்கப்படுதல்.
(3) விபத்தொன்றில் பாதிக்கப்பட்டவர்களின் புகைப்படங்கள் அடையாளத்தை வெளிப்படுத்தும் விதமாக அறிக்கையிடப்படுதல்.
(4) மற்றுமொரு புகைப்படவியலாளரின் பதிவுகளை அவரின் அனுமதியுடன் பயன்படுத்திக்கொள்ளல்.

**32.** ஊடகங்களால் நபரொருவருக்கு ஏற்படும் பாதிப்பைக் கவனிப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனம்
(1) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
(2) இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
(3) பொது அளிக்கைக் கட்டுப்பாட்டுச் சபை
(4) இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம்

**33.** டி. எம். கொலம்பகே பற்றிய மிகச் சரியான கூற்று எது?
(1) அவர், இலங்கையில் தொலைக்காட்சி ஆரம்பிக்கப்பட்டதன் முன்னோடி ஆவார்.
(2) அவர், இலங்கையில் வானொலி ஆரம்பிக்கப்பட்டதன் முன்னோடி ஆவார்.
(3) அவர், இந்த நாட்டின் முதலாவது வானொலி அறிவிப்பாளர் ஆவார்.
(4) அவர், இந்த நாட்டின் அனுபவம் நிறைந்த செய்திப்பத்திரிகை ஊடகவியலாளரொருவர் ஆவார்.

**34.** புகைப்படமொன்றை எடுப்பதற்கு அவசியமான அடிப்படைக்கூறுகள் யாவை?
(1) மாதிரி (model) / புகைப்படவியலாளர் / புகைப்படக் கருவி / ஒளியமைப்பு
(2) புகைப்படவியலாளர் / புகைப்படக் கருவி / எதிர்பார்க்கப்பட்ட காட்சி / செயற்கை நுண்ணறிவு
(3) செல்லிடப்பேசி / புகைப்படவியலாளர் / ஒளியமைப்பு / மாதிரி
(4) புகைப்படவியலாளர் / புகைப்படக் கருவி / எதிர்பார்க்கப்பட்ட காட்சி / ஒளியமைப்பு

**35.** ஊடக நிறுவனமொன்றின் மாகாண / பிராந்திய ஊடகவியலாளர்
(1) ஊடக நிறுவனத்தின் பதவியுயர்வுகளுக்கும் ஆதாயங்களுக்கும் உரித்துடையவர் ஆவார்.
(2) ஊடக நிறுவனத்தில் முழுநேர சேவை வழங்குநர் ஆவார்.
(3) வழங்கும் சேவைகளுக்கு தொடர்புடையதாகக் கொடுப்பனவுகளைப் பெறுபவர் ஆவார்.
(4) ஓய்வு பெறுவதுடன் அவரது ஊடகச் செயற்பாடுகள் முற்றுப்பெறும்.

[பக். 5 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**36.** பின்வரும் கூற்றுகளைக் கருத்திற்கொள்க.

* முன்னே ஒரு திரை அவசியமாக இருக்கும்
* தொலையியக்கக் கருவி (remote control) ஒன்றினால் இயக்கப்படக் கூடுமானது
* வீடியோக்களைப் பார்வையிடமுடியும்

மேலுள்ள கூற்றுகள் தொடர்புபடுவது

(1) பல்லூடக எறிவையுடன் ஆகும். (2) வழுக்கி எறிவையுடன் ஆகும்.
(3) மேந்தலை எறிவையுடன் ஆகும். (4) காட்சி எறிவையுடன் ஆகும்.

**37.** ஷெனோன் - வீவர் கணித தொடர்பாடல் சூத்திரத்தில், 'இரைச்சல்' பதம் அர்த்தப்படுவது

(1) செய்தியைச் சமிக்ஞைகளாக மாற்றி ஊடுகடத்தப்படுவதை ஆகும்.
(2) சமிக்ஞைகள் மீண்டும் செய்திகளாக மாற்றப்பட்டுப் பெறுநர்களால் பெற்றுக்கொள்ளப்படுதலை ஆகும்.
(3) பெறுநர் சரியாகச் செய்தியை உள்வாங்க முடியாதிருப்பதை ஆகும்.
(4) சமிக்ஞைகளையும் குறியீடுகளையும் மாத்திரம் கொண்ட செய்தியை ஆகும்.

**38.** ஊடக விமர்சகரொருவரின் பிரதான வகிபங்கு

(1) செய்திகளுக்குத் தேவையான மூலங்களை வழங்குவது ஆகும்.
(2) ஊடகத்திற்கும் பெறுநருக்கும் இடையே தொடர்பை ஸ்தாபிப்பது ஆகும்.
(3) ஊடக ஒழுக்கநெறிகள் பற்றிய விழிப்புணர்வைப் பெறுநர் பெறச் செய்தலாகும்.
(4) செய்திகளின் உண்மையான இயல்பைப் பெறுநருக்கு அறிமுகப்படுத்தலாகும்.

**39.** செய்திப்பத்திரிகை உரிமையாண்மையின் தன்மைகளும், தொடர்புடைய செய்திப்பத்திரிகைகளும் கீழே தரப்படுகின்றன.

| | உரிமையாண்மை | | செய்திப்பத்திரிகை |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரிமைகொண்டிருப்பது | A | டெய்லி நியூஸ் |
| 2 | பொது அமைப்பு உரிமைகொண்டிருப்பது | B | கவட்ட கத்திகயா |
| 3 | தனிப்பட்ட வணிகம் உரிமைகொண்டிருப்பது | C | ஞானார்த்த பிரதீபாய |
| 4 | அரசு உரிமைகொண்டிருப்பது | D | வீரகேசரி |

மேலுள்ள உரிமையாண்மையுடன் தொடர்புடைய செய்திப்பத்திரிகையைச் சரியாக உள்ளடக்கியிருக்கும் தெரிவு எது?

(1) 1 A, 2 B, 3 C, 4 D (2) 1 A, 2 C, 3 D, 4 B
(3) 1 B, 2 D, 3 C, 4 A (4) 1 B, 2 C, 3 D, 4 A

**40.** 1978 அரசியலமைப்பிற்குரிய கூற்று யாது?

(1) ஒவ்வொரு பிரஜையும் பேச்சுச் சுதந்திரத்திற்கும் வெளியீடுகளை உள்ளடக்கிய வெளிப்பாட்டுச் சுதந்திரத்திற்கும் உரித்துடையவர்.
(2) தமக்கான கருத்தைச் சுதந்திரமாகக் கொண்டிருப்பதற்கும் அதனை வெளிப்படுத்துவதற்கும் அனைவருக்கும் உரிமை உண்டு.
(3) பிறரின் தடை ஏதுமின்றி, தேச எல்லைகளைக் கடந்து, எந்த ஊடகம் வழியாகவும் தகவல்களைப் பெறவும் வழங்கிடவும் அனைவருக்கும் உரிமை உண்டு.
(4) சமூகத்தின் பண்பாட்டில் பங்குபற்றுவதற்கும், கலைகளை இரசிப்பதற்கும், விஞ்ஞானரீதியான நவீன காரியங்களில் ஈடுபடவும், அவற்றின் ஆதாயங்களைப் பங்கீடு செய்துகொள்ளவும் அனைவருக்கும் உரிமை உண்டு.

* *

PAST PAPERS WIKI

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**87 T I, II**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)**
**General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)**

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය **I, II**
**தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் I, II**
Communication and Media Studies **I, II**

## தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் II

* **முதலாம்** வினாவையும் வேறு எவையேனும் **நான்கு** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* **முதலாம்** வினாவுக்கு **20** புள்ளிகளும் ஏனைய எல்லா வினாக்களுக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** ஆதிமனிதன் வேட்டையாடும் யுகத்திலிருந்து பூகோள மனிதனாகப் படிநிலை மாற்றம் பெறுவதற்கான முக்கியமான காரணியாகத் தொடர்பாடல் அமைந்திருந்தது.

(i) பாரம்பரியக் கட்புலத் தொடர்பாடல் முறைகள் **இரண்டினைப்** பெயரிடுக.

(ii) ஆளிடைத் தொடர்பாடலின் சிறப்பியல்புகள் **இரண்டினைத்** தருக.

(iii) மொழியின் அடிப்படைப் பணிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(iv) பாரம்பரிய சமூகத்தில் வாழ்ந்த மனிதனால் பயன்படுத்தப்பட்ட செவிப்புல ஊடகங்கள் **இரண்டினைப்** பெயரிடுக.

(v) வெளியிடப்படும் காலம் சார்ந்து, செய்திப்பத்திரிகையை வகைப்படுத்தும் வழிகள் **இரண்டினைத்** தருக.

(vi) வானொலி ஊடகத்தின் வரையறைகள் **இரண்டினை** எடுத்துக்கூறுக.

(vii) இலங்கையில் இயங்கும் அரச தொலைக்காட்சி நிறுவனங்கள் **இரண்டினையும்** பெயரிடுக.

(viii) புதிய ஊடகங்களின் இயல்புடன் தொடர்புடையதாக **இரண்டு** அம்சங்களைக் குறிப்பிடுக.

(ix) கணினியைப் பயன்படுத்தும்போது நீங்கள் பின்பற்றும் ஒழுக்கநெறிகள் **இரண்டினைத்** தருக.

(x) தகவல் பரிமாற்றத்தில் நீங்கள் பயன்படுத்தும் சமூக ஊடக வலையமைப்புக்கள் **இரண்டினைப்** பெயரிடுக.

**2.** (i) செய்திப்பத்திரிகை ஊடகத்தில் பெறுநரை அடையாளப்படுத்தப் பயன்படுத்தப்படும் சொற்பதம் என்ன?

(ii) செயற்படாத பெறுநர் பற்றிச் சுருக்கமாக விவரிக்குக.

(iii) பின்வரும் செய்திப்பத்திரிகை உள்ளடக்க வடிவங்களை விவரிக்குக.
(அ) செய்திகள்
(ஆ) சிறப்புக் கட்டுரைகள்
(இ) விளம்பரங்கள்

(iv) வெகுசனத் தொடர்பாடலின் பண்பினை **நான்கு** முக்கிய அம்சங்களின் கீழ் விளக்குக.

[பக். 7 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**3.** இயற்கை அனர்த்தம் ஒன்றின்போது போக்குவரத்து, மின்சாரம் மற்றும் தொலைபேசிச் சேவைகள் தடைப்பட்டதால் தகவல்களைப் பெறமுடியாதிருந்ததால் சில கிராமப் பகுதிகள் தனிமைப்படுத்தப்படும் நிர்ப்பந்தம் எழுந்தது.

(i) அனர்த்த நிலைமைகளின்போது தகவல்கள் துரிதமாகப் பெறப்பட முடியுமான பிரதான வெகுசன ஊடகம் எது?

(ii) சமூகத்திற்குத் தகவல்கள் தேவைப்படுவதுடன் தொடர்புடைய அம்சங்கள் **இரண்டினைத்** தருக.

(iii) வெகுசன ஊடகங்களால் சமூகத்திற்கு ஏற்படக்கூடுமான பாதிப்புக்கள் **மூன்றினைச்** சுருக்கமாக விளக்குக.

(iv) தகவல்களைத் திரட்டும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய அம்சங்கள் **நான்கினை** விவரிக்குக.

**4.** "ஊடகங்கள் சமூகத்தை வழிநடத்துகின்றன" என்பது பாடசாலை ஊடக விழாவின் இம்முறைக்கான கருப்பொருளாகும்.

(i) தொலைக்காட்சியில் தற்காலத்தில் ஒளிபரப்பாகும் பெரும்பாலான தொலைக்காட்சி நாடகங்களில் கதைக்களமானது எந்த சமூக நிறுவனத்தைச் சுற்றிச் சுழல்கிறது?

(ii) புலமைச் சொத்துச் சட்டத்தின்படி 'ஆக்கம்' என அறியப்படும் படைப்பு வகைகள் **இரண்டினைப்** பெயரிடுக.

(iii) இலத்திரனியல் செய்திப்பத்திரிகையொன்றின் பண்புகள் **மூன்றினைச்** சுருக்கமாக விவரிக்குக.

(iv) வெகுசனத் தொடர்பாடலின் பின்வரும் செயற்பாடுகள் இரண்டினையும் கலந்துரையாடுக.
(அ) தூண்டல்
(ஆ) பொழுதுபோக்கு

**5.** இந்தியாவில் நிறைவடைந்த தென்னாசிய சிரேஷ்ட தடகளப் போட்டிகள் இலங்கை விளையாட்டு இரசிகர்களை மகிழ்ச்சியடைய வைத்தன. விசேட நிகழ்வுகளை நேரலையாக வெகுசன ஊடகம் வழியாகவும் புதிய ஊடகம் வழியாகவும் நாம் பார்வையிட முடிந்தது.

(i) தொலைக்காட்சி ஊடகம் எந்தத் தொடர்பாடல் வகையைச் சார்ந்தது?

(ii) ஊடகக் குவிகையின் / இணைவின் ஆதாயங்கள் **இரண்டினைத்** தருக.

(iii) தொலைக்காட்சி ஊடகத்தின் பின்வரும் இயல்புகள் மூன்றின் முக்கியத்துவத்தை மேற்படி நிகழ்வுடன் தொடர்புடையதாகச் சுருக்கமாக விவரிக்குக.
(அ) கட்புல செவிப்புல ஊடகம்
(ஆ) அண்மித்ததன்மை
(இ) நேரடித்தன்மை

(iv) தொலைக்காட்சி வழியாக மேற்படி விளையாட்டுக்களை அறிக்கையிடுவதற்குப் பின்வரும் நிகழ்ச்சி வகைகள் இரண்டையும் பயன்படக்கூடுமான வழிகளை வேறுவேறாக விவரிக்குக.
(அ) செய்திகளும் நடப்பு விடயங்களும்
(ஆ) அறிக்கையிடல் அல்லது விவரண நிகழ்ச்சிகள்

**6.** சசிலாவினால் சுசிலாவிற்குப் பகிரப்பட்ட தகவலொன்று காட்டுத்தீ போல விரைவாகப் பரவியது.

(i) மேற்படி தகவல் பரவுகையுடன் தொடர்புடைய முறைசாராத் தொடர்பாடல் மாதிரி யாது?

(ii) ஒருவர் மற்றவருக்கிடையே தகவல்களைப் பரிமாறுவதற்குப் பயன்படக்கூடுமான ஊடக உபகரணங்கள் **இரண்டினைப்** பெயரிடுக.

(iii) முறைசாராத் தொடர்பாடலின் இயல்புகள் **மூன்றினைச்** சுருக்கமாக விவரிக்குக.

(iv) வானொலி நிலையமொன்றின் பின்வரும் பிரிவுகளின் வகிபங்குகளை விவரிக்குக.
(அ) நிகழ்ச்சிப் பிரிவு
(ஆ) விளம்பரப் பிரிவு

**7.** தொடர்பாடலில் படைப்பாக்கத்துடனும் ஒழுக்கநெறியுடனும் இயங்குவது சமகாலத்தில் முக்கியமானதாகும்.

(i) தொழில்வாண்மைமிக்க புகைப்படவியலாளர் ஒருவரது இயல்புகள் **இரண்டினைத்** தருக.

(ii) தொடர்பாடல் பணிக்குத் தேவையான தகவல் மூலாதாரங்கள் **இரண்டினைச்** சுருக்கமாக விவரிக்குக.

(iii) தொடர்பாடலில் பயன்படும் படைப்பாக்க வெளியீட்டு விதிகள் **மூன்றினைச்** சுருக்கமாக விவரிக்குக.

(iv) "கலைஞர்களைப் பாதுகாத்தலும் புலமைச் சொத்துச் சட்டமும்" என்பது பற்றி, **100-150** வார்த்தைகளைப் பயன்படுத்திக் கட்டுரையொன்றை வரைக.

❊ ❊ ❊

Past Papers Wiki